பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 21 புதன்கிழமை (7-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 331

உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
எரிக் கணேஷ்
564, 566, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
(சி-2751)

## வவுனியாசட்டத்தரணிக்கு "அந்திரெக்ஸ்" கடிதம்

வவுனியாவில் உள்ள பிரபல சட்டத்தரணி ஒருவருக்கும் ''அந்திரெக்ஸ்'' கிருமிகள் அடங்கிய தூள்கள் நிரப்பப்பட்ட கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

வவுனியா சட்டத்தரணி என். எம். எஸ், சொர்ணபாலாவுக்கு கலிபோர்னியாவில் இருந்து அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் ஒன்றிலேயே ''அந்திரெக்ஸ்'' கிருமிகள் அடங்கியகடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், கடிதத்தில்சந்தேகம்கொண்ட சட்டத்தரணிசொர்ணபாலா அக்கடிதத்தை உடைக்காது மருத்துவ ஆய்வுக்காக வவுனியா பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இக்கடிதத்தை கையாண்டவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ

## விடுதலைப்புலிகளுடன் பேசியே பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்

### அமைச்சர் கதிர்காமர் பேட்டி

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலமே தீர்வுகாணப்பட வேண்டும். இதேகொள்கையைத்தான் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு இன்று வரை கொண்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அளித்துள்ள பேட்டியிலேயே இவ்வாறு கூறியுள்ளார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இனப்பிரச்சினைக்கு விடுதலைப்புலிகளுடன் பேசித் தீர்வு காண வேண்டுமென்ற அரசின் கொள்கையில்எதுவித மான மாற்றமும் இல்லை.

சர்வதேச பயங்கரவாதத்தினை ஒழிப்பதற்கு எம்மாலான சகல ஒத்துழைப்பையும் வழங்கி வருகிறோம். அதே நேரம் எமது நாட்டுப்பிரச்சினை என்பது நாம் ஒன்றாகப்பேசித் தீர்க்கப்பட வேண்டியதொரு விடயமாகும்.

அதற்கான முயற்சியில்அரசு தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறது என்றும் கதிர்காமர் தெரிவித்துள்ளார். (வ)

## யாழ். மாவட்டத் தேர்தல்

# மோசடிகளை தடுக்க தனியான ஏற்பாடு

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(நமது நிருபர்)

டிசம்பர் மாதம் 5 ம் திகதி நடை பெறவுள்ள 12-வது பொதுத் தேர்தலை யாழ்.குடா நாட்டில் நீதியாகவும் நேர்மையாகவும் நடத்துவதற்குரிய ஒழுங்குகளை தேர்தல் திணைக்களம் மேற்கொள்ளுமென்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தன்னைச் சந்தித்த நான்கு தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் உறுதி அளித்துள்ளார்.

டிசம்பர் மாதம் 5ம்திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை நீதியாகவும் நேர்மையாகவும் மோசடிகள் எதுவும் இன்றி நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூட்டணி அமைத்துப் போட்டியிடும் நான்கு தமிழ்க்கட்சித்தலைவர்கள் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவிடம் கோரிக்கைவிட்டிருந்தனர்.

இக்கோரிக்கைக்கு அமைவாக தேர்தல் ஆணையாளர் நேற்று தேர்தல்அலுவலகத்திற்கு இவர்களை அழைத்து மகாநாடு ஒன்றை நடத்தியிருந்தார். இந்த மகாநாட்டிலேயே தேர்தல் ஆணையாளர் தமிழ்க்கட்சித்தலைவர்களிடம் மேற்கண்ட வாக்குறுதியை அளித்துள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## எஸ். பிக்கு எதிராக பெண்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவை அவமதிக்கும் வகையில் முன்னாள் அமைச்சர் எஸ் பி. திஸநாயக்கா தேர்தல் பிரசாரங்களில் பேசிவருவதைக் கண்டித்து கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் பெண்கள் கூடி ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மகளிர் அணியினர் ஏற்பாடு செய்திருந்தனர். இவர்களுடன் பல்வேறு பொதுநிறுவனப் பிரதி நிதிகளும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

(08 ம் பக்கம் பார்க்க)

## போதைப் பொருள் வைத்திருந்த இலங்கைத் தமிழர் இருவர் சென்னையில் கைது!

(சென்னை)

சென்னையில் உள்ள லொட்ஜிசில் 300 கிலோக்கிராம் போதைப்பொருள் வைத்திருந்ததாக கூறி இரு இலங்கைத்தமிழர்களை சென்னை போதைப் பொருள் தடுப்பு பொலிசார் கைது செய்துள்ளனர்.

சுமார் 35 கோடி இந்திய ரூபா பெறுமதியான இப்போதைப் பொருளை அஹமதாபாத்திலிருந்துஇலங்கைக்கு கடத்தவிருந்த போதே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகமது ஜெயா (வயது-37) அண்ணா குமார் (வயது 39) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர். (ந-4)

## ஓமந்தையில் கிளைமோர் தாக்குதல் இரு படையினர் ஸ்தலத்தில பலி

### பதிலுக்கு இராணுவம் ஷெல் தாக்குதல்

[வவுனியா]

வவுனியாவுக்கு வடக்கே ஓமந்தைப் பாலமோட்டைப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கிளைமோர்த் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

நேற்று அதிகாலை 6 30 மணியளவில் இடம்பெற்ற இக்கிளைமோர்த்தாக்குதலை அடுத்து அப்பகுதியைநோக்கி இலங்கை இராணுவம் பலத்த எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டவண்ணமிருந்ததாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

மரத்தில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோரை வெடிக்க வைத்ததில் வழமையான வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த இரு இராணுவத்தினர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளனர்.

இத்தாக்குதலில் இராணுவத்தினரின் ஆயுதங்களையும் புலிகள் கைபபற்றி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஊடகத்

(8-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சு நடத்த கட்சிகளுக்கு உரிமை உண்டு

### கருணாரத்தின தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசியல் ரீதியாகப் பேச்சுநடத்த சகலஅரசியல் கட்சிகளுக்கும் உரிமையுண்டு அதனை இனவாத வெறியில் நோக்கக்கூடாது.

இவ்வாறு புதியஇடதுசாரிக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்:

அவர் தொடர்ந்துபேசுகையில் தமிழீழவிடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படு

(8 ம் பக்கம் பார்க்க)

## ஒருவர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

கொழும்பு ஆனைமடுப் பகுதியில பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர் ஒருவர் நேற்றிரவு இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போது வானில் வந்த இனந்தெரியாதோர் அவரைச் சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது: (ந-4)

## மட்டக்களப்பில் ஹர்த்தால் வழமை நிலை ஸ்தம்பிதம்

(மட்டக்களப்பு)

மட்டக்ளகப்பு தமிழ்ப் பிரதேசங்களில் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் கடையடைப்பு நடவடிக்கையால் வழமையான செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன.

தமிழ்க்கிராமங்களை உள்ளடக்கியதாக முஸ்லிம் பிரதேச செயலகம் அமைக்கப்படுவதை கண்டித்தும், அதற்கான வர்த்தமானி அறிவித்தலை ரத்துச் செய்யுமாறு கோரியும் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பினால் ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது:

இதனால் வர்த்தக நிலை

(8-ம் பக்கம் பார்க்க)

## மலையக மக்கள் முன்னணி பொ. ஐ. முன்னணிக்கு ஆதரவு

(கண்டி)

கண்டிமாவட்டத்தில் மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் பலர் பொதுஜனஐக்கிய முன்னணியில் இணைந்துள்ளனர்.

கண்டிமாவட்டத்தில் மலையகமக்கள் முன்னணி ஆதரவு பொதுஜன ஐக்கிய முன்னணிக்கே ஆதரவுவழங்கவிருப்பதாகக் கட்சியின் தலைவர் பி.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையகமக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய ஆற்றல் பொதுஜன ஐக்கியமுன்னணிக்கே உண்டென்றும் கண்டிமாவட்டத்தில் பொதுஜனஐக்கிய முன்னணிக்கே கூடியளவுஆதரவு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

(O/ L) ஆங்கில மாதிரி வினாத்தாள்
OCTOBER - 2001

மாணவர்களே! இன்றே வாங்கி விடை எழுதி உங்கள் அறிவை மேம்படுத் துங்கள். பயிற்சி போல எதுவுமில்லை. யாழ்ப்பாணம் பூபாலசிங்கம், மானிப்பாய் நாயக பாலன், சுன்னாகம் துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் உட்பட மற்றும் இடங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ரூபா 10/- மட்டுமே ஆசிரியர் K சோமசுந்தரம் சந்தை கிழக்கு மானிப்பாய்.

(3922)


யுத்தத்தை நிறுத்தக் கோரி

# பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு

# 20 ஆம் திகதி யாழ். வருகை

## 4 நாட்கள் தங்கி கையெழுத்து வேட்டை

[கொழும்பு]

யுத்தத்தை நிறுத்தி தமது குழந்தைகளின் உயிரைப்பாதுகாக்கும்படி கோரி கையெழுத்துத் திரட்டுவதற்காக யுத்தத்தினால்பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்ய முடிவு செய்துள்ளது.

எதிர் வரும் 20 ஆம் திகதி யாழ். குடாநாட்டுக்குவருகை தரவுள்ளமேற்படி அமைப்பின் முக்கியஸ்தர்கள்நான்குநாட்கள் தங்கியிருந்து கையெழுத்துக்களைத்திரட்டவுள்ளதாக அமைப்பின் தலைவர் திருமதி விசாகா தர்மதாச தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேற்படி கையெழுத்து திரட்டும் பணி நாட்டின் ஏனைய பாகங்களில் முடிவடைந்துவிட்டமை குறிப்பிடத்தக்கது (உ)

## மறியற் போருக்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் யாழ். செயலகம் முன்பாக காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மறியற் போராட்டத்தில் கலந்து கொண்டு ஐக்கிய சோஷலிசக் கட்சியின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் க.தேவதாசன் தனது பூரண ஆதரவைவழங்கினார்.

பாதிக்கப்பட்டோரின் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து கொண்ட அவர் இங்குள்ளபிரச்சினைகளை சிங்கள ஊடகங்கள் மூலமாகத் தென்னிலங்கை மக்களுக்குதெரியப்படுத்தப் போவதாக கூறினார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் யாழ். மாவட்ட முதன்மைவேட்பாளரும் புதிய ஜனநாயக்கட்சியின் பொதுச் செயலாளருமானசி. கா.செந்திவேல்,மற்றும்வேட்பாளரான சட்டத்தரணி சோ தேவராஜாஆகியோரும் இப்போராட்டத்திற்கு தமது ஆதரவை வழங்கினர்.

(உ-106)

## தேசிய மட்டப்போட்டிக்கு 35 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் யாழ். மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளிலும் வெற்றி பெற்றோர் கொழும்பு மகரகம தலைமையகத்தில்16,17,18,ஆம் திகதிகளில் நடைபெற உள்ள தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்வதற்காக செல்லவுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மிருதங்கம், அபிநயநடிப்பு,பேச்சு அறிவிப்பாளர், கிராமிய நடனம் (குழு),ஓவன், கிராமியப் பாடல் (தனி), கிராமிய பாடல் (குழு), சாஸ்திரியப் பாடல், பரதநாட்டியம், புதிய நிர்மாணிப்பு நடனம், வயலின் ஆகிய போட்டிகளிலேயே இவ்வாறு கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இப்போட்டிக்குச் செல்லும் குழுவில் 35 பேர் அடங்குவர்.

(உ-2)


## எண் சோதிடம்

இன்றைய உலகில் எண் சோதிடம் முதலிடம் வகிக்கின்றது. உங்கள் பிரச்சினைகளையும் அபிலாசைகளையும் குறிப்பிட்டு எழுதுங்கள். வெற்றிகரமான, அதிர்ஷ்டகரமான நல்வாழ்வுக்கு வழி வகுத்துத் தருவோம். இன்றே (ஆங்கில பிறந்த திகதி) பெயர்,கையொப்பம் இட்டு முத்திரை ஒட்டிய சுய விலாசமிட்ட கடித உறையுடன் விண்ணப்பிக்கவும்.

சனி. ஞாயிறு மட்டும் நேரில் சந்திக்கலாம்;

எண் கலை ஆசான்
சி. சி. கே.
ஸ்ரீராஜராஜேஷ்வரன்
விததனை வீதி,
வல்வெட்டித்துறை.

(3905)


## மயக்கமருந்து கொடுத்து வாலிபர்களிடம் திருட்டு

(திருகோணமலை)

5 வாலிபர்களுக்கு சோடாவில் மயக்கமருந்து கலந்து கொடுத்து அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகளை களவாடிச்சென்ற சம்பவம் கடந்த சனியன்று இரவு கொழும்பில்இருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்ட ரயில்வண்டியில் இடம் பெற்றுள்ளது.

ரயில்வண்டி கம்பஹாவுக்கும் பொல்காவலைக்கும் இடையே சென்றுகொண்டிருந்த வேளை அவர்களுக்கு தாகம் ஏற்படவே, சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்திய களவுநோக்கம் கொண்ட குழு சோடாவில் மயக்கமருந்தைக் கலந்து கொடுத்து தமது காரியத்தை முடித்துக்கொண்டு தலைமறைவாகி விட்டனர். (உ)

## தடுப்பு முகாம விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்,மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என் ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாம்செல்லவுள்ளார்.

அவர் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளிற்கு அவர்களின்உறவினர்களினால் வழங்கப்படும்.கடிதம் மற்றும் உடைகள்என்பவற்றைஎடுத்து சென்று ஒப்படைப்பதுடன்,கைதிகளினால் உறவினர்களிற்கு வழங்கப்படும் கடிதங்களையும் எடுத்து வருவார்.

(உ-9)


# A Public Lecture

Jointly organized by the Dept. of Geography, University of Jaffna and the National Integration Programme Unit, Sri Lanka.

Prof. Charles Malcom
(University of Cape Town)
Dr. Umesh Bawa
(University of Western Cape Town)
Will speak on

Truth and Reconciliation Commission
South African Experience
on
Wednesday 7th November 2001 (today)
at 2.30 p. m.

Venue: GEOGRAPHY HALL, University of Jaffna
ALL ARE WELCOME

NIPU and Dept of Geography

Dept. of Geography,
University of Jaffna.

(2828)



# அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

உரும்பிராய், உரும்பிராய் வடக்கில் வசித்து காலஞ்சென்ற சின்னத்தம்பி மகேஸ்வரா என்பவரின் இறுதி விருப்பு ஆவணமாக விட்டு இறந்த மரணச் சொத்துகள் சம்பந்தமாக;

மரணமெய்தியவர்

வழ. இல. தத்துவம் / 20

சின்னத்தம்பி மகேஸ்வரா
கைம்பெண் இந்திரா,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
மனுதார்

இவ்வழக்கு 2001ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26ம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு: இ: த. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் மனுதாரின் சட்டத்தரணி செய்த விண்ணப்பத்தையும் சமர்ப்பணத்தையும் மன்று ஏற்று வலம்புரி பத்திரிகையில் விளம்பரம் செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ளமையால்.

மேலே உள்ள இலக்கங்கொண்ட மரணசாதன தத்துவ வழக்கில் காலஞ்சென்றவரின் இறுதி விருப்பு ஆவண மரணச் சொத்துக்கும் மரணமெய்தியவரின் வேறு மரணச்சொத்துக்களுக்கும் மனுதாரை மரணசாதன தத்துவகாரியாக நியமிக்க வேண்டுமென்றும் குறித்த மனுதாருக்கு மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்கவேண்டுமென்றும் கோரியுள்ளமையால், இவ்வழக்கில் அக்கறை உள்ள ஆள் எவரும் 2001ம் ஆண்டு கார்த்திகை மாதம் 09ம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி ஏன் மனுதாருக்கு மேற்கூறிய நிவாரணங்களை வழங்கக் கூடாதென்பதற்கு ஏதாவது காரணம் இருந்தால் காட்டுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2001ம் ஆண்டு ஐப்பசி மாதம் 26ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
து. சிறீமோகன்
பதிவாளர்.

வரைந்தது
கனகரட்ணம் அஸோசியேட்ஸ்
மனுதாரின் சட்டத்தரணி.

(சி 2830)



அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்

# 19 ஆவது ஆண்டு மகரஜோதிப் பெருவிழா

(48 நாள்கள் மண்டல பூஜை)

இடம்: ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்
(தம்பையா முதலியார் சத்திரம்-கொச்சிக்கடை, சென்,அன்ரனிஸ் மாவத்தை, கொழும்பு-13)

காலம்: கார்த்திகை மாதம் 1 ஆம் திகதி (16. 11. 2001) வெள்ளிக்கிழமை
அதிகாலை 5.30 மணிமுதல் 8.30 மணிவரை

மஹாகணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 48 நாள்களுக்கு காலை, மாலை விஷேட அபிஷேகம், பஜனை பதினெட்டாம்படி விஷேட பூஜை ஆகியன

19 ஆவது ஆண்டாக மலையேறும் சபரிமலைக் குருமணி

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்

தலைமையில் நடைபெறும்.
'சாமியே சரணம் ஐயப்பா'

N S. மோகன் நாயுடு J. P. (நிர்வாகப்பணிப்பாளர் - சாஸ்தாபீடம்)
வே. செல்வநாயகம் (யாத்திரைக் குழுச் செயலாளர்)

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்
சர்வதேச இந்துமத குருபீடம்,

(Approved by the Government of Sri Lanka)
751/A, Bloemendhal Road, Colombo-15. Tel: 072-422239

(C/2827)

# சனாதனனின் கற்பனை வளம் செறிந்துள்ள ஓவியங்கள் ஆவணப்படுத்தப்படத் தக்கவை

1989 ஆம் ஆண்டுசனாதனனின்ஓவியக் கண்காட்சிநடைபெற்றது 62ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இக்கண்காட்சிபற்றி'திசை' வார வெளியீட்டில் ,தூவானம்' பத்தியில் 'நீலாமபரன்' (அ.யேசுராசா)பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்

இந்த ஓவியங்களில் மனிதர்கள, இயற்கைக் காட்சிகள் என்பன எமது சூழலுடன் இயைபு பெறாமல் போலியானதாக இருக்கின்றன. கலைஞனோ எழுத்தாளனோ தனது சூழலை மனிதர்களை -தனது அனுபவப்பரப்பினுள் உள்வாங்கி தனது சொந்தத்தன்மைகளைஅடையாளங் காட்டும் முறையில் கலைப்படைப்புகளாக வெளிப்படுத்துவதே சரியானது.சனாதனன் போன்ற இளைஞர்கள்நிச்சயம்இதனை மனதிற் கொள்ள வேண்டும். கண்காட்சி என்று வரும் போது எண்ணிக்கை முக்கியமல்ல தனித்துவம் நிறைந்த தரமான படைப்புகள் இடம் பெறுவதே முக்கியம் அவை சிறு தொகையினதாகக் கூட இருக்கலாம்.

ஆம் அன்று இருபது வயது இளைஞன்இன்று நுண்கலைத் துறை கலை,வரலாற்று விரிவுரையாளராக தனதுஓவியங்களை புறொஜெக்டர் மூலம் காட்சிப் படுத்தியுள்ளார்.

**பாதிப்பு**

1990 இற்குப் பிற்பட்ட குடா நாட்டு மக்களின் வாழ்வியல் யதார்த்தங்களை தான் உணர்ந்தவண்ணமாக தூரிகை முனைக்கு உயிர்ப்பூட்டி படைத்துள்ளார் விரிவுரையாளர் சனாதனன் மனித உடலை விஸ்வரூபப்படுத்தி சுயத்தின் தேடலாக இன அடையாளத்தினை அதன் முகவரியைத் தேடும் தலை தொலைத்த அல்லது மூளைச் சலவைக்கு உட்படுத்தப்பட்ட முண்டங்களாக எம் இனம் சித்தரிக்கப்படுகின்றது. தனி மனிதனுக்கு ஏற்படும் நெருக்கீடுகள் அவன் சார்ந்த சமூகத் தளத்தைப் பாதிப்பதையே அவர் தனது ஓவியங்கள்மூலம் விளக்க முற்பட்டுளார்.

ஒருமனிதனுக்குள்ள பிரச்சினைகள் அவனுக்குள்ளேயே அடங்கி பெருஞ்சுவாலையாகஎன்றுகொண்டிருக்கும் நிலையை பிறர் அறிய வாய்ப்பில்லை.பேச எழுத முடியாததை ஓவியம் மூலம் அதுவும் நவீன ஓவியம் (MODERN ART) வாயிலாக உருக் கொடுக்கும்போதுஅதற்கோர் வடிகால் தேடப்படுவதுடன் கவனிப்புக்கும் உள்ளாகின்றது.

குறித்த காலப்பகுதியில் நிசமும் வரலாற்று முக்கியத்துவம மற்றும் சமூக எதிர்பார்ப்புசார்ந்த எண்ணக்கருக்களை ஒரு கலைஞன் வெளிக்கொணர விருமபு

> தா சனாதனனின் ஓவியங்களின் வில்லைப் படக்காட்சி (SlideShow of Paintings) கடந்தவியாழக்கிழமை யாழ்ப்பாண விஞ்ஞான சங்க சமூக விஞ்ஞான பிரிவின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக புவியியற் துறை மண்டபத்தில் நடைபெற்றது.

வான்; அது அவனது உரிமையும் கூட. அதுவும் இன்று ஒரு வியாக்கியானம் கொடுக்கும் கலைஞன் கால நீரோட்டத்தின் மாற்றத்தால் அதற்கு முற்றிலும்மாறானகொள்கை உடையவனாக மாறலாம்.

**கலைவடிவம்**

இந்த விடயத்தை சனாதனன் அரசியல் என்று குறிப்பிடுவது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. தனிமனித அரசியல் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தினாலும்கூட கலைஞனுக்குஉள்ள உரிமையை அது பாதிப்பது இல்லை; பாதிக்கவும் கூடாது. கலை வடிவம் வெளிவரும் முறையையே இது தங்கியுள்ளது என்பது கலைஞர்கள் அறியாததல்ல.

சனாதனனின்ஓவியங்கள் பல்வேறு அடுக்குகளால் ஆக்கப்பட்டவையாக இருந்தன. பண்டையவரலாற்று நிகழ்வுகளை இன்றைய வாழ்வியல் போக்குகளோடு இணைத்து அவை உலக வரலாற்றுச் சக்கரத்துடன் ஒற்றுமைப்படுவதைக் காட்ட இந்த ஓவியங்கள் அதிகம் முயன்றுள்ளன.

'பெற்றமகனை களத்தில் பலிகொடுத்து விம்முகின்ற தாய்மாரின் சோகக்கதைகள் என்மனதை பெரிதும் பாதித்தன' என்று குறிப்பிடும் ஓவியர், யேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை, சிலுவை சுமப்பை, மேரிகளின் கவலைதோய்ந்த வாழ்வு ஓட்டங்களை, மடோனாக்களை எமது இன உணர்வுகளோடுஒட்டவைக்கிறார்.இது தனிமனிதர்களுக்கான அல்லது கலைஞர்களுக்கான தோல்வியாக இருக்கலாம். ஆனால் இனத்திற்கோ விடுதலைக்கோ ஏற்பட்ட தோல்வி அல்ல என்பதை ஓவியங்கள் உணர்த்துகின்றன.

**கற்பனைவளம்**

1995 இடப்பெயர்வை 95 இற்கு பிற்பட்டகால யாழ். நிலைமைகளை சமய இலக்கிய புராணக் கதைகள் வாயிலாக ஓவியங்கள் மூலம் தந்த சனாதனனின் கற்பனைவளத்தையும் இருப்புக்கான தேடலையும் உணர்வுள்ள அனைவரும் பாராட்டுவர்.

சோதனைச் சாவடியில் அடையாள அட்டை காட்டுவதையும் எதையுமே மறைக்க முடியாதநிலையில்அவர்களின் கரங்கள் எம் உடல் மீது படர்வதையும் நிர்வாண மனிதன் மீது தேள், ஓணான் போன்றன ஊரும்போது ஏற்படும் அருவருப்புக்கு ஒப்பிடக்கூடிய ஓவியங்கள் காலத்தால் அழியாத கருவூலங்கள் ஆகியுள்ளன. இதற்கு பல்வேறு விமர்சனங்கள் எழலாம். அலை அ.யேசுராசா அண்மையில் ஓரிடத்தில் குறிப்பிட்டது போன்று ''கலைஞன் வாழும் காலத்தில் அவனது படைப்புப் பற்றிய குறிப்பை அவன் மூலமாகவே அறிய முற்பட வேண்டும். அவை ஆவணப் படுத்தப்பட்டு பாதுகாக்கப் பட வேண்டும்'' என்பது சனாதனனின் இக்காட்சிப் பகிர்வின் மூலம்நிதர்சனமாகியுள்ளது. எனினும் மேலே குறிப்பிட்ட ''காலத்திற்கு ஏற்ப மாறும் கொள்கைகள'' என்ற அலையால் இவையும் அடித்துச் செல்லப்படலாம். எனவே படைப்புக்கள் வரட்டும். அவை தாம் தாமாகவே இருக்கட்டும்.

**ஓவியப்பிரிவு அவசியம்**

இறுதியக 1989 திசை' யில் சுட்டிக்காட்டப்பட்ட ஓவியக் கல்வி தொடர்பான குறிப்பொன்றை நோக்குதல் இத் தருணத்தில் பொருத்தமானது ''ஓவியக் கண்காட்சிகள் சிறிய அளவிலாயினும் அடிக்கடி நடைபெறவேண்டும். ஓவியப்பயிற்சி வகுப்புக்களையும் ஆங்காங்கே, தகுதியானவர்கள் நடத்த வேண்டும். யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் ஓவியப்பிரிவு கட்டாயம் ஆரமபிக்கப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள்தான் ஓவியத்துறை வளர்ச்சியைத் துரிதப்படுத்தும். அத்தோடு ஓவியங்களை வசதியாகக் காட்சிப்படுத்தக்கூடிய நிறைவான கண்காட்சி மண்டபமொன்று விரைவில்யாழ்ப்பாணத்தில் கட்டப்படவேண்டியது மிகவும் முக்கியமானதாயிருக்கிறது

இவற்றில் சில இன்று நிறைவேறியுள்ளன. சில நிறைவேற்றப்பட வேண்டும். அத்தோடு இலை மறைகாயாக உள்ள ஓவியங்கள் வெளிக்கொணரப்படவேண்டும். அவர்களுக்கு இன்றுள்ள நவீன தொழில்நுட்ப வசதிகள ஏற்படுத்திக் கொடுக்கப் பட வேண்டும். இதன் மூலம் யாழில் ஓவியக்கலை மீண்டும் புத்துயிர் பெற வாய்ப்பேற்படும்.

**எம்.ஷாந்தன். சத்தியகீர்த்தி**

## தொடர்ந்தும் விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவன் க.டிரோஜன் தொடர்பான வழக்கு நேற்றையதினம் யாழ் நீதிபதி இ.த.விக்னராசா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்த மாணவனை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

(உ-10)

## தபால்மூல வாக்களிப்பு 3746 பேர் தகுதி

(யாழ்ப்பாணம்)

தபால்மூல வாக்களிப்புக்கு யாழ். மாவட்டத்தில் 2 ஆயிரத்து 500 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

இதே வேளை, மட்டு மாவட்டத்தில்தபால்மூல வாக்களிப்புக்கு 3 ஆயிரத்து 867 பேர் விண்ணப்பித்த போதிலும் 121, விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு 3 ஆயிரத்து 746 பேர் வாக்களிப்புக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

(உ)

## அடை மழையிலும் விடாத பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

கொட்டும மழையிலும் யாழ். நகரப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்

நேற்றைய தினம் யாழ். குடாநாட்டில் பல பகுதிகளிலும் கடும் மழை பெய்தவண்ணம் இருந்த போதிலும் 4தமிழ்க்கட்சியின் கூட்டமைப்பினர் தமது பிரசாரத்தினை வாகனத்தில் இருந்தபடி மேற்கொண்டனர்.

(உ- 10)

## திறப்பு விழா

(அச்சுவேலி)

அச்சுவேலி மேற்கு செல்வநாயகபுரம் தந்தை செல்வா சனசமூகநிலையத் திறப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் க. சங்கர்கணேஷ் தலைமையில் நடைபெறவுளளது.

(உ-218)

## பிறருக்கு உதவும் பண்பு நம்மிடையே அருகி வருகின்றது வலி வடக்கு பிரதேச செயலர் கவலை

(சுன்னாகம்)

பொதுவாக நம்மவர்கள் எதையும் பிறரிடம், இருந்தே எதிர்பார்க்கிறார்களே தவிர பிறருக்கு உதவுகின்ற பொது நலப்பண்பு மிகமிக அருகிவருகின்றது.

இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் கூறினார்.

யா/தெல்லிப்பழைமகாஜனக் கல்லூரியின் ஜெயரத்தினம் நினைவுதினமும் கனிஷ்டபிரிவு பரிசளிப்புவிழாவும் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் பொ. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற போது, அங்குபிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசளிப்பு பேருரையைநிகழ்த்திய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இன்றைய சமுதாயத்தினரிடையே மாணவருடைய கல்விக்கும், ஒழுக்கத்திற்கும் யார் காரணம்? ஆசிரியர்களா?பெற்றோர்களா? என்ற கேள்விஎழுந்துள்ளது;ஏனென்றால் மாணவர்கள் வீட்டில் இரவுப் பொழுது மட்டுமே இருக்கின்றார்கள்.பகல் முழுவதும் பாடசாலையிலே இருக்கிறார்கள்: இந்த வகையில் அவர்களுடன் நெருங்கிப் பழகுபவர்கள் ஆசிரியர்களும் சக மாணவர்களும் பெற்றோர்களும் தான்.

வளரும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள். அதே போல முளையில் பிள்ளைகளுக்கு பழக்குகின்ற தீய பழக்கங்கள் தான் பெரியவனாகும் போது தீய வழிகளுக்கு கொண்டு செல்கின்றது

ஆனபடியால் பெற்றோர்களே ஆசிரியர்களே உங்கள் பிள்ளைகளை,மாணவர்களை நல்லவர்களாக வாழவிடுங்கள் வாழவையுங்கள்.

இப்படிச்செய்யும் போது எங்களுடைய பிள்ளைகள் சின்னவயதில் இருந்து சிறந்தவர்களாக, அறிவுள்ளவர்களாக, ஒழுக்கமுள்ளவர்களாக, அடக்கமுள்ளவர்களாக வாழ்ந்து எமது சமுதாயத்திற்கும்,வீட்டிற்கும், நாட்டிற்கும் ஒரு உன்னதநிலையை ஏற்படுத்துகின்ற உன்னத புருஷர்களாக நிச்சயமாக வாழுவார்கள் என்று கூறினார்.

(உ-207)

## மூவர் கைது முறைப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தன்னாமுனையைச் சேர்ந்த மூவர் சத்துருக்கொண்டான் படையினரால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யபபட்டுள்ளது.

மட்டக்களப்பு தன்னாமுனையைச் சேர்ந்த தங்கராசு விஜயகுமார், சண்முகம் சூரியகுமார், சர்வோதைய வீதியைச் சேர்ந்த முருகுப்பிளளை மகாதேவன் ஆகியோரே படையினரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் தற்போது மட்டக்களப்பு சிறைச் சாலையில் நாசகார தடுப்பு முகாமில் வைத்து படையினரால் விசாரிக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

(உ-4)

## ஆர்ப்பாட்டப் பேரணி நாளை கொழும்பில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நாளை வியாழக்கிழமை மாலை3.00மணியளவில் கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்ட பேரணியை கூட்டு தொழிற்சங்கச் சம்மேளனம்ஏற்பாடுசெய்துள்ளது.

(உ-5)

## தென்னாபிரிக்க பேராசிரியர் இன்று பல்கலையில் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புவியியற்துறையினரும் தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்திட்டப் பணியகமும் இணைந்து, 'உண்மைக்கும் மீள இணக்கத்திற்குமான ஆணைக்குழு, தென் ஆபிரிக்க அனுபவம்' என்னும் பொருளில் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்துளளனர்.

இக் கருத்தரங்கு இன்றுபிற்பகல் 2. 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுளளதாக புவியியல்றுறைத் தலைவர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கில் தென்னாபிரிக்க கேப்டவுன் பல்கலைக்கழக சுகாதார விஞ்ஞான பீடத்தின் உளவியல் துறைப் பேராசிரியர் சாள்ஸ் மல்கம், மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி உமேஷ்பபா ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்

(உ-2)

## முன்னாள் அமைச்சர் மோசடி செய்த கோடிக்கணக்கான பணம் வங்கியில் வைப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா மோசடி செய்த கோடிக் கணக்கான பணம் வங்கி ஒன்றில்வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

வர்த்தக ரீதியில் வீழ்ச்சி கண்டிருந்த பென் ஏசியா வங்கியில் அபயரத்தின பண்டார என்ற தனது உறவினரின் பெயரில் 400 மில்லியன் ரூபாவை வைப்புச் செய்துள்ளாரென்றும்,

மேலும் பல மில்லியன் ரூபாபணம் எங்கு வைப்புச் செய்துள்ளாரென்றும் அதன் விபரம் விரைவில் கண்டு பிடிக்கப்படுமென்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

(உ-5)

## நாய்களுக்கு நஞ்சூட்டி அழிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு பிரதேசசபையின் அனுசரணையுடன் புத்தூர்ப்பகுதியில் நாளை கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

(எ-9-19)

## அரசுக்கு முண்டு கொடுத்தபடி

# தமிழர் பிரதிநிதிகள் புலிகள் என்னும் ஏமாற்று

# அரசியல் எமக்கு உடன்பாடானதல்ல

## ஐ. சோ. கட்சி தேவதாசன் கொள்கை முழக்கம்

(யாழ்ப்பாணம்)

சிங்கள மக்கள், தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக என்று அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பிக்கிறார்களோ அன்று எமது விடுதலைப் போராட்டத்திற்கு வெற்றி கிடைத்துவிடும் வியட்நாம விடுதலைப் போராட்ட வரலாறு எமக்கு இதனையே உணர்த்துகிறது:

இவ்வாறு ஐக்கிய சோஷலிஸக்கட்சியின்யாழ்மாவட்ட முதன்மை வேட்பாளரும் 'சலனசித்திரம்' அமைப்பின் பொதுச் செயலாளருமான க. தேவதாசன் தெரிவித்துள்ளார்.

எமது நிருபரின் இலங்கையின் அரசியல் நிலவரங்கள் தொடர்பான கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்; யுத்தமும் இனப்பிரச்சினையும் தீரும் வரை பாராளுமன்றம் நிலையானதாக இருக்கமுடியாது. இத் தேர்தல் மூலம் பதவிக்கு வரும் அரசும் பலவீனமானதாகவே இருக்கும். இன்று அரசியல் வாதிகள் தமது நலனைக் கருத்திற்கொண்டு வெற்றிவாய்ப்பை உறுதிப்படுத்தவேமக்கள் முன் மாயா ஜாலம் போடுகிறார்கள். எனவே மக்களுக்கு அரசியல் அறிவு ஊட்டப்பட வேண்டியது அவசியமாகும்:

இதேவேளை நாம் தேர்தலில் நிற்பதற்கான அடிப்படைக் காரணம் யுத்தத்தை உடனடியாக நிறுத்துவதற்கு மக்கள் அணியொன்றைத் திரட்ட வேலைத் திட்டமொன்றை உருவாக்குதலே ஆகும்:

அரசியல் பேதங்களுக்கு அப்பால் தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் அரச சார்பற்ற நிறுவனங்களை ஒன்றிணைத்து நாடளாவிய ரீதியில் போராட்டமொன்றை முன்னெடுப்பதற்கு இச்சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்துவோம்.

இங்குள்ள போராட்ட வரலாறு தமிழ்மக்கள் தமக்காகவும் சிங்களவர் தமக்காகவும் போராடுகின்ற ஒன்றாகவே கடந்த காலங்களில் இருந்து வந்துள்ளது.

இதனை மாற்றி எனது தலைமையில் தமிழ் மக்களுக்காக சிங்கள வெகுஜன அமைப்புகளை இணைத்து பலமான பாலமொன்றை அமைக்கின்ற வேலைத்திட்டத்தை முன்னெடுக்க உள்ளேன்.

தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுக்கு இலங்கை முழுவதும் உள்ள சிங்கள கிராமங்களுக்குச் சென்று தமிழ் மக்களின் பிரச்சினையைச் சரிவர தெளிவு படுத்த வேண்டிய கடமை உண்டு.

இன்று சிங்கள மக்கள் மத்தியில் எமது விடயத்தில் சாதகமான சூழல் ஒன்று உருவாகி வருகிறது. இதைப் பயன்படுத்தி பாராளுமன்றுக்கு வெளியே கடுமையாக உழைக்க உள்ளோம் என்றார்

மேலும் கூறுகையில்; நான் கலைத்துறை சார்ந்தவன் என்றமுறையில் தமிழ் கலைத்துறையின் வரலாறும் அடக்கி ஒடுக்கப்பட்ட ஒன்றாகவே இருந்துவந்துள்ளது.

அரசியல் வாதிகள் கலையைப் பார்க்க விரும்பாத காரணத்தால் இனத்தின் சுதந்திரவேட்கை அதன் மூலமும் தடுக்கப்பட்டே வந்துள்ளது. இதனால் கலைஞர்கள் அரசியல் வாதிகளாக மாற வேண்டிய துரதிர்ஷ்ட நிலை ஏற்பட்டிருக்கிறது.

மக்கள் நலன் சார்ந்த முறையில் உரிமைப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக் அரசியல் கட்சிகள் முன்வரட்டும்.

எல்லோரின் எதிர்பார்ப்புகளுக்கும் மாறாக பொ. ஐ. முவும் ஐ.தே.கவும் இணைந்து தேசிய அரசொன்றை அமைக்கும் நிலை ஏற்பட்டால் இப்படியான வேலைத்திட்டமும் தலைமையுமே தமிழ் மக்களைக் காப்பாற்றமுடியும்:

அரசின் மக்கள் விரோத யுத்த முன்னெடுப்புக்குப் பாராளுமன்றத்தில் பக்கபலமாக இருந்து கொண்டு வடக்கு–கிழக்கில் ''யுத்தத்திற்கு எதிராகப் போராட மக்கள் முன்வரவேண்டும்'' எனக் கூறும் நயவஞ்சக அரசியலையோ அல்லது கொழும்பில் அரசுப்படையினரின் பூரண பாதுகாப்புடன் வாழ்ந்து கொண்டு தமிழர். தாயகத்தில்புலிகளேதமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதி' எனக் கூறும் நம்பிக்கைத் துரோக அரசியலையோ நான் சார்ந்தவன் அல்ல என்று குறிப்பிட்டார். (உ-106)

## நேர்முகத் தேர்வுக்கு

# அழைக்கப்பட்ட பலர் ஏமாற்றத்துடன் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி ஆட்சேர்ப்புக்கான நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களில் பலர் நேர்முகத் தேர்வுக்கு தோற்றாமலே ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை நேற்று அவதானிக்க முடிந்தது.

குறிப்பிட்டளவு மாணவர்களைத் தவிர ஏனையோர்க்கு இன்றையதினமே நேர்முகத் தேர்வு இடம்பெறும் என்ற நேர்முகத்தேர்வுக் குழுவினரின் அறிவித்தலையடுத்தே, தூர இடங்களில் இருந்து கொட்டும் மழைக்கு மத்தியிலும் சிரமப்பட்டு வந்த பலர் இவ்வாறு திரும்பிச் சென்றனர்.

இதே வேளை, நேர்முகத் தேர்வு குழுவினரின் திட்டமிடாத் தன்மையே இவ்வாறான அசௌகரியங்களுக்கு காரணம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-2)

## மூவர் காயம்

(கொழும்பு)

வெலிஓயாவுக்கு வட மேற்கே அந்தவெட்டுனுவெவப் பகுதியில் ரோந்து சென்ற படையினர், எதிர்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களைக் கண்டு சிறு ஆயுதங்களால் தாக்கியதில் மூவர் காயமடைந்துள்ளதாக ஊடகத் தகவல் மையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## இராசி பலன்

7-11-2001
ஐப்பசி 21, புதன்
ஷஷ்டி மு ப 7 44
ஸப்தமி வைகறை 5.42
புனர்பூசம் மு. ப 8.57
இராகுகாலம் 12 05-1.35
சுபநேரம் 4.35-6.05சித்தம்

**மேடம்**
ரோகபயம், தன்னம்பிக்கைக்குறைவு, விரும்பாத உறவு, காரியதாமதம்.

**இடபம்**
காரிய அனுகூலம், தன வரவு. சுவாரஸ்யம், அந்நியர் சந்திப்பு:

**மிதுனம்**
வீண்செலவு, வாய்த்தர்க்கம், முயற்சிதாமதம், திடீர் நன்மை.

**கடகம்**
பிரயாணம். ஜனவசியம், புதியபொருள் சேர்க்கை, காரியம் கைகூடும்.

**சிங்கம்**
சுபகாரிய செலவு, மனக்கிலேசம், திடீர்பயணம், உறவினர் சந்திப்பு;

**கன்னி**
பெருமையடைதல், காரிய அனுகூலம், தன விரயம், குடும்ப நன்மை,

**துலாம்**
அதிகபிரயாசை, மேன்மை, நல்லநிகழ்வு, முயற்சிபலிதம்;

**விருச்சிகம்**
கட்டுப்பாடு, மனச்சஞ்சலம், பிரயாணம், தொழில் சிந்தை.

**தனுசு**
உறவினர் மனஸ்தாபம், உடல்வியாதி, முயற்சிதாமதம், போசனசுகம்.

**மகரம்**
அபூர்வ சந்திப்பு, சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய நன்மை, தொழில்சிறப்பு;

**கும்பம்**
சுவாரஸ்யம், வியாதிசுகம், சந்தோஷசெய்தி, முயற்சி நன்மை;

**மீனம்**
வியாதி, குடும்பமனஸ்தாபம். முயற்சிதாமதம், தொழில்நன்மை.

வளவன்

# பாகிஸ்தானில் லேடன் கை ஓங்கின் அமெரிக்க படைகள் அங்கு நுழையும்

(வாஷிங்டன்)

பாகிஸ்தானில் பின்லேடன் ஆதரவுத் தீவிரவாதிகள் கை யோங்கி முஷாரப் தூக்கியெறியப்பட்டால் அமெரிக்கா பாகிஸ்தானில்இறங்கும்என்று அமெரிக்க செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானில் தீவிரவாதிகளால் முஷாரப் தூக்கியெறியப்பட்டால் அணுவாயுதங்களைக் காப்பாற்ற அமெரிக்க படைகள் போரிடும் என்று அமெரிக்கபாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை முஷாரப் அரசின் இராணுவத்துக்கு அமெரிக்கா உதவ் கொடுத்து அணு ஆயுதங்களைப்பாதுகாக்குமென்றும்,

எதிர்க்கும் பாகிஸ்தான் தீவிரவாதிகளைச் சுட்டுக் கொல்ல ஒருபோதும் அமெரிக்கப்படைகள் தயங்கமாட்டாதென்றும் பாதுகாப்பு வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## ஆப்கான் மக்களுக்கு

# மனிதாபிமான உதவிகளை உடன் ஆரம்பிக்குக

## தலிபான் ஐ.நா.வுக்கு அழுத்தம்

(காபூல்)

அமெரிக்காவின் தொடர்ச்சியான தாக்குதல்காரணமாக புலம் பெயர்ந்துஅவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள ஆப்கான் பொது மக்களுக்கான மனிதாபிமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு தலிபான் ஆட்சியாளர்கள் ஐக்கியநாடுகள் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாகிஸ்தானுக்கானதலிபான் தூதுவர் முல்லாஅப்துல்சலாம் ஐக்கியநாடுகள் சபையிடம்இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாட்டு சபையின் உதவி நிறுவனங்கள் புலம் பெயர்ந்த லட்சக்கணக்கான ஆப்கான் மக்களுக்கான மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலும் பார்க்க உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபட்டுவருதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆனால், தலிபான்களின் இக்குற்றச் சாட்டை ஐக்கிய நாடுகள் சபை அதிகாரி ஒருவர் முற்றாக மறுத்துள்ளார். (உ-5)

# தலைமைப்பதவியை ஏற்க லாரா பின்னடிப்பு

(சென்னை)

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் தலைமைப் பதவியை ஏற்க பிரபல வீரர் பிரைன் லாரா மறுப்புத் தெரிவித்துள்ளார். இலங்கை வந்துள்ள மேற்படி அணிக்கு தலைமை ஏற்கும்படி விடுத்த அழைப்பையே லாரா மறுத்துவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன;

அணியின் தலைமைப் பதவியை ஏற்பதனால் தான்துடுப்பாட்டத்தில கவனம்செலுத்தி தனது முழுத் திறமையை வெளிக்காட்ட முடியாது எனவும் அதனாலேயே தான் தலைமைப் பதவியை ஏற்கவில்லை எனவும் அவர் கூறியிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இலங்கை வந்துள்ள அணியில் லாரா இடம்பெற்றுள்ள போதும் அவர் போட்டிகளில் பங்குபற்றுவதை உறுதியாகக் கூற முடியதுள்ளதுடன் லாராவின் கையில்ஏற்பட்டுள்ள வலி காரணமாக முன்னர் அணியில் இடம்பெற மாட்டார் என அறிவிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

## தலிபான்களுக்கு ஒத்துழைக்கும்

# அல்-ஜெசீரா தொலைக் காட்சிக்கும் புகழாரம்

(காபூல்)

அரபு உலகின் சி. என்.என் என கட்டாரின் அல்-ஜெசீரா தொலைக்காட்சி சேவை வர்ணிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க- தலிபான் யுத்தம் சம்பந்தமான உடனடித் தகவல்களை அல்- ஜெசீரா தொலைக் காட்சி அரபு மொழியில் வழங்கி வருகின்றது.

சி. என். என் மேற்குலக நாடுகளில் எவ்வாறு பிரபலமானதும்உடனடிதகவல்களை தருவதில் சிறப்பிடம் பெறுகின்றதோ அதை விட சிறப்பான இடத்தை ஆப்கான் நெருக்கடியால் அல்- ஜெசீரா பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

ஒஸாமா பின்லேடன் மற்றும் தலிபான் முக்கியஸ்தர்கள் கூட தமது அறிக்கைகளை முஸ்லிம் மக்களுக்கான அறைகூவல்களை அரபுமொழியிலேயே வெளியிடுவதற்கு அல்- ஜெசீரா உதவுகின்றது; இதனால் சகலரின் கவனமும் தற்போது அல் - ஜெசீரா மீதேதிரும்பி உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

## பென்ரகனுக்கு

# அந்திரெக்ஸ் கடிதம் அனுப்பி வைப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகனில் அந்திரெக்ஸ் கிருமிகள் அடங்கிய துகள்கள் முதற் தடவையாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பென்ரகன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்;

அங்கு அமைந்துள்ள இரு அஞ்சல் பெட்டிகளிலேயே அந்திரெக்ஸ் துகள்கள் அடங்கிய கடிதங்களகண்டெடுக்கப் பட்டதாகவும் அவற்றில் ஒரு அஞ்சல் பெட்டிபயன்பாட்டில் இலலாததென்றும் அவர்கள் தெரிவித்தனர்;

இதே வேளை பென்ரகனுக்கு ஏற்கனவே கிடைக்க அந்திரெக்ஸ் துகள்கள் அடங்கியதாக சந்தேகிக்கப்பட்ட கடிதங்கள் அனைத்தும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு அவற்றில் அந்திரெக்ஸ் துகள்கள் இல்லையென உறுதிப்படுத்தப்பட்டமையும் தெரிந்ததே. (உ-5)

## மின்சாரம் இல்லை

(அச்சுவேலி)

உரும்பிராய் மேற்கு சிவகுல வீதிப்பகுதிக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை. இப்பகுதிக்கு 90 ஆம் ஆண்டின் முன்பு மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது (உ...

## இன்று ஒரு தகவல்

# விருப்பப்படுவது எப்படி?

'என்னைக் கண்டாலே எல்லாரும் விலகி ஒடுகிறார்கள். சர் யாருமே நெருங்கி வருகிறதில்லை! என்னுடைய முகராசி அப்படி.' என்று சிலர் சொல்வதுண்டு.! இப்படிச் சொல்கிறவர்களிலே தான் குறையே தவிர அடுத்தவர்களை இதற்காகக் குறை சொல்ல முடியாது. மற்றவர்களிடம் பேசுவதும், பழகுவதும் ஒருகலை. சிலருக்கு இயற்கையாகவே இது அமைந்திருக்கும். அப்படிஇல்லாதவர்கள் இதைப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம். கொஞ்சம் முயற்சி பண்ணவேண்டும். அவ்வளவுதான்!

பொழுதுவிடிந்து பொழுது போனால் எத்தனையே பேரிடம் நாம் பேசவேண்டியிருக்கிறது. பழகவேண்டியிருக்கிறது. சொந்தக்காரர்கள்-அக்கம் பக்கத்தில் இருக்கிறவர்கள், அலுவலகத்தில் கூட வேலைசெய்கிறவர்கள்-வீட்டில் வேலைசெய்கிறஆயா காய்கறி விற்கிற அம்மா-இப்படி எத்தனையோ பேரைப் பார்க்க வேண்டியிருக்கிறது-பேசவேண்டியிருக்கிறது. அவரவருக்குத் தகுந்த மாதிரி பிரியமாகப் பேசிப் பழகுவது ஒருகலை. அப்போதுதான் நம்மிடம் எலலாரும் பிரியமாக இருப்பார்கள். அடுத்தவர் நம்மீது பிரியமாக இருக்க வேண்டுமென்றால் அவர்களிடம் போய்நின்று 'என்மீது நீ கொஞ்சம் பிரியமாக இரு' என்று கேட்டுக் கொண்டிருக்கக்கூடாது.

நீங்கள் நடந்துகொள்கிற முறையைப்பார்த்து அவர்களாக உங்களை விரும்ப வேண்டும். சரி! எப்படி நடந்துகொள்கிறது? இனிமையாகப் பேசுகிற தன்மை! அடக்கமான குணம். உதவிசெய்கிற மனப்பான்மை! பெருந்தன்மைஆகிய குணங்கள் எல்லாருக்கும் பிடிக்கும். அதனால் இத்தகைய குணங்களை வளர்த்துக்கொள்வது நல்லது. அதைவிட்டு விட்டு-'என் குணம்இதுதான்! இதை ஏற்றுக்கொள்கிற வர்கள் என்னிடம் வரட்டும்! அது போதும்' என்று சொன்னால், நம்பாட்டில் தனியாக இருக்க வேண்டியதுதான்!

நமக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை யென்றால் அநேகமாக அதற்குக்காரணம் 'அவர்கள் நம்மை மதிக்கவில்லையே' என்கிற குறையாகத்தான் இருக்கும். மற்றவர்கள் நம்மை மதிக்கிற அளவுக்கு நடந்து கொண்டால் நமக்கு எலலோரிடமும் பிரியம் ஏற்பட்டு விடும்! இன்னொருவரிடம் உள்ள எந்தக் குணம் நமக்குப் பிடிக்கவில்லையோ அதே குணம் நம்மிடம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நாலுபேருக்கு மத்தியில் இருக்கிற போது நாம் சிரித்தால், மற்றவர்களுக்கும் நிச்சயமாகச் சிரிப்பு வரும். அதனால் சிரிக்கப்பழக்கிக் கொள்வது நல்லது.

நமது வாழ்க்கையில் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் உண்டு, இல்லையென்றுசொல்லவில்லை! இருந்தாலும் அவற்றுக்கு மத்தியிலும் நாம சந்தோஷப்படுகிறதுக்கும் நிறைய விஷயங்கள இருக்கிறது. அதைபபுரிந்து கொள்ள வேண்டும். முதற்தடவையாக நாம் ஒருவரைப்பார்க்கிறோம். அவர் சிரிக்கவில்லையென்றால்-மிகவும் கர்வமுள்ள ஆளாக இருப்பாரோ என்று நினைக்கத்தோன்றும். அப்படி இருக்கக் கூடாது. ஒருவருக்கொருவர் கொஞ்சம் சிரித்துக் கொண்டால் -மனதிலுள்ள இறுக்கம் போய் விடும். அதன் பின்னர்கலகலப்பாக பேசுவதற்கு அது வசதியாக இருக்கும். நாம் பேசுகிற போது அதை மற்றவர்கள் கேட்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறதா இல்லையா? அதேமாதிரித்தானே அவர்களுக்கும் இருக்கும். அதனால் மற்றவர்கள பேசுவதைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும்.

ஒருநண்பர் நம்மிடம் ''சார்! இன்றைக்கு வருகிற வழியில் ஒரு பத்துஅடி வாய்க்காலை ஒரே தாண்டாகத் தாண்டி வந்து விட்டேன்'' என்று கொஞ்சம் பெருமையாகச் சொன்னால் உடனே நாம் ''அது என்னசார் பெரிய பிரமாதம்? நான் நேற்று 20 அடி வாய்க்காலை ஒரேயடியாகத் தாண்டிவிட்டேன்'' என்று அளக்க ஆரம்பித்துவிடக் கூடாது. நீங்கள் நிஜமாகவே 20 அடியைத்தாண்டியிருந்தாலும் அதை இன்னொரு சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளலாமே!

சிலருக்கு அடுத்தவர்கள் செய்கிற நல்ல காரியமே கண்ணில் படாது. ஏதாவது தவறுதலாகச் செய்து விட்டால் அதுதான் பெரிதாகத் தெரியும். தினமும் வீட்டுக்கு காய்கறி கொண்டு வந்து கொடுக்கிற அம்மா எவ்வளவோ நாள் நல்ல காய் கறி கொடுத்திருப்பார்கள். அதையெல்லாம் மறந்து விடுவோம். என்றைக்காவது ஒருநாள் அவர் கள் கொடுதத வெண்டிக்காய் முற்றலாகப் போயிற்றென்றால் அதைமட்டும் மறக்காமல் அவரிடம் சொல்வோம். நேற்றுக்கொடுத்த கத்தரிக்காய் இளசாக இருந்தது. மிகவும் நன்றாக இருந்தது என்று சொல்லத் தோன்றுகிறதா? அப்படி நல்லதைப் பாராட்டுகிற குணத்தை வளர்த்துக் கொண்டால் நம்மீது எலலோருக்கும ஒரு விருப்பம் ஏற்பட்டு விடும்.

இன்னொரு விஷயம் எல்லாருக்குமே தன்மானம் உண்டு. யாருக்குமே அவர்களைப்பற்றி விமர்சனம் செய்வது - குறையைச் சுட்டிக் காட்டுவது பிடிக்காது. அதை நாம மறந்துவிடக் கூடாது. இவ்வளவு விபரமும் தெரிநத இரண்டுநண்பர்கள் சந்தித்துக் கொண்டார்கள். ஒருவர் சொன்னார் ''சார்! நான் வீட்டில மிகவும சாமர்த்தியமாக நடந்து கொளகிறேன். சத்தமே போடமாட்டேன். அதனால என் சமசாரம் என்னைத் திட்டுகிறதேயில்லை'' என்றார் மிகவும பெருமையாக. இதைக்கேட்டதும் இன்னொருவர், ''சார்! நான் எங்கள வீட்டில் அப்படியொன்றும் சாமர்த்தியமாக நடந்து கொளகிறதிலலை. நிறையச் சத்தம் போடுவேன். அப்படி இருநதாற்கூட நானும் திட்டு வாங்கிறதிலலை'' என்றார். ''அது எப்படி?'' என்று ஆச்சரியமாகக் கேட்டார் அவர். ''அதுஒன்றும் பெரிய ஆச்சரியமில்லை! ஏனென்றால் எனக்கு இன்னும் கலியாணமே ஆகவில்லையே!'' என்றார் இவர். □

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# 10 இலட்சம் புலம்பெயர் இலங்கை

# தொழிலாளர் வாக்களிக்க வசதி

(கொழும்பு)

இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்கள் சுமார் 10 இலட்சம் பேர் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெறவுள்ளனர்

வாக்காளர் ஒருவர் எங்கிருந்தாலும் வாக்களிப்பது அவருடைய உரிமையாகுமென்று அரசசார்பற்ற நிறுவனமொன்று மனித உரிமைகள் ஆணைக்குழு முன்வாதாடியதைத் தொடர்ந்தே மேற்படி 10இலட்சம் பேருக்குதேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெற்றுக கொடுக்கப்பட்டுள்ளது.

ஆயினும், டிசெம்பர் மாதம் 5ஆம் திகதிபொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இது நடைமுறைப்படுத்தப்படுமா என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

தேசிய தொழிலாளர் காங்கிரஸில் இணைவுபெற்றபுலம் பெயர் தொழிலாளர் செயற்பாட்டு வலைப்பின்னல் அமைப்பு புலம்பெயர் தொழிலாளர் வாக்களிக்கும் உரிமைக்காக குரல்கொடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

### தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம்

## போதிக்கும் ஆசிரியர்க்கு இடைக்காலப் படிவெட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழ்மொழிமூலப் பாடசாலைகளில் சிங்கள மொழியினைக் கற்பிக்கும் பயிலுநர் ஆசிரியர்களுக்கு ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் அரசினால் வழங்கப்பட்டுவந்த ஆயிரம் ரூபா இடைக்காலக் கொடுப்பனவை உடனடியாக நிறுத்துமாறு வட கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அறிவித்துள்ளது.

அத்துடன் அரசினால் அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ள இடைக்காலக் கொடுப்பனவாகிய ஆயிரத்து 200 ரூபாவும் இவர்களுக்கு வழங்கப்படவில்லை. (உ)

### இறைவலுவூட்டல் ஆன்மீகப்பணி

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் பாண்டியன் தாழ்வு தவத்திரு தோமஸ் இளைஞர் கழகத்தினரால் இறைவலுவூட்டல் என்னும் ஆன்மீகபபணி முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

இளைஞர்களை நீதியின்வழியில் நடப்பதற்கும் குடும்பங்களிடையே ஒற்றுமையைப் பேணுவதற்கும நாட்டில்சமாதானம் ஏற்படுவதற்குமாய் இந்த இறை வலுவூட்டல் எனும் வழிபாடு நடத்தப் படுகின்றது.

ஒவ்வொரு வியாழனும் மாலையில் நடைபெறும இவ் வழிபாட்டில் அதிகமான இளைஞர் யுவதிகளும் பெரியோரும் கலந்து கொள்கின்றனர்.

தவத்திரு தோமஸ் இளைஞர்கழகத்தின் இந்து ஆன்மீகபபணி அண்மையில்யாழ் வந்து இறைவழிபாடுகளை நடத்திய தென்னிந்தியாவின் டிவைன் சென்றர் அருட்தந்தையரின் வழிகாட்டலில் தொடர்கின்றது. (எ-59)

## பிரதேச செயலக ரீதியான வீடமைப்பு திட்டத்தினால் இதுவரை 50பேர் பயன்

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால், பிரதேச செயலர் ரீதிய க வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வீடமைக்கவென பத்தாயிரம் ரூபா பெறுமதியான கூரைத்தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச் செயற்பாட்டிற்கென யாழ். மாவட்டத்திற்கு 9 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

யாழ் மாவட்டத்தில் இத்திட்டத்திற்கென தெரிவு செய்யப்பட்ட 90பேரில் இதுவரை 50பேரிற்கு இந்த உதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-2)

## வீடமைப்புத் திட்டம் 75 வீதம் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் கோண்டாவில் பகுதியில் 50 பேரிற்கு வீடுகள் அமைப்பதற்கென தலா 30 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தால் மீள் குடியேற்ற திற்காக வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபாவுடன் சேர்த்து மேற்படி பணத்தையும் பயனாளிகள் தம் பங்களிப்பையும் பயன்படுத்தியநிலையில் இவ் வீடமைப்புத் திட்டத்தின் 75 வீதம் பூர்த்தியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

### விவசாயிகள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நாளை வியாழக்கிழமை மு. ப. 9.30 மணிககு சிறந்த விவசாயிகள் கௌரவிக்கும நிகழ்வு நடைபெறவுளளது.

இந் நிகழ்விற்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும், கமநல அபிவிருத்திதிணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன், கால் நடை அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் பொ. இராமநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கிறார்கள். (செ)

## விளையாட்டுகளில்பங்கேற்க 50 இளைஞர் யுவதிகள் மகரகம செல்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய இளைஞர் சேவைகள் மன்றததினால் நடத்தப்பட்ட தடகள மற்றும் பிற விளையாட்டுப போட்டிகளில் முதலாம் இடம் பெற்ற வீரர்கள் கொழும்புமகரகமதலைமையகத்தில் 25, 26, 27, திகதிகளில் நடைபெறவுள்ள தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து 50 இளைஞர் யுவதிகள கலந்து கொளள உளளமை குறிபபிடத்தக்கது. (உ-2)

### ச. ச. நிலையத்தின விழிப்புக்குழு

(யாழ்பபாணம)

கோப்பாய்ப்பகுதியில்நடைபெற்றுவரும் களவுகள், கசிப்பு விற்பனை முதலிய சமூகவிரோதச் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக கோபபாய் தெற்கு உதயதாரகை சனசமூக நிலையத்தினர் விழிபபுககுழுவை அமைததுள்ளனர்.

சமூக விரோதச் செயல்களினால் கோப்பாய்ப் பகுதி மக்கள் பல தொல்லைகளுக்குள்ளாகிய நிலையில் சனசமூக நிலையம் விழிப்புக் குழு மூலம் ஆற்றவுளள பணி சிறப்புடன் முன்னெடுத்துச் செல்லப்படும் என்று மேற்படி நிலையத்தினர் தெரிவித்துளளனர். (எ-9)

## வன்னிப் பிரதேசத்தில் ஆசிரியர்பற்றாக்குறை

வன்னிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறைநிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 34ஆயிரம் மாணவர்கள கல்வி கற்கின்றனர், அவர்களுக்கு 1596 ஆசிரியர்கள் தேவையாக இருக்கும்போது 696 ஆசிரியர்கள மாத்திரமே சேவையில் உள்ளனர். என்று கல்விப் பணிப்பாளர் ரீ. அரியரட்ணம் தெரிவித்துள்ளார். (ம)

### சிந்தனைக்கு விருந்து

**கொன்றாரைக் கொல்லல்**

கோவ்வை உதட்டழகி, கோலப்பல் முத்தழகி
நவ்வி விழியழகி, நன்கொடுங்கி - 'இவ்வளவோ!'
என்றே அயிர்க்கும் இடையாளைக் கற்பழித்துக்
கொன்றாரைக் கோறல் முறை.

நவ்வி - மான், அயிர்க்கும் - ஐயப்படும்,
கோறல் - கொல்லல்.

'பழையவன்'

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில்
யாழ்ப்பாணத்தில் மீண்டும்

# மக்கள் குறை நிவிர்த்தி சேவை

## மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களின் நடமாடும் சேவை

**★ வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின்**

ஏற்பாட்டில் கடந்த வைகாசி மாதம் நடைபெற்ற மக்கள் குறைநிவிர்த்தி சேவையின் போது அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் எதிர்வரும் **10ஆம் 11ஆம் திகதிகளில் (10.11-2001 சனிக்கிழமை 11-11-2001 ஞாயிற்றுக்கிழமை)** யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை மக்கள் குறைநிவிர்த்திசேவை நடைபெறும்.

★ இச்சேவையின் ஊடாக தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்பும் அனைவரும் இச்சேவையில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

★ மத்திய அமைச்சுக்களின் உயரதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், வடக்கு - கிழக்கு மாகாணசபையின் செயலாளர்கள் திணைக்களத்தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் இச்சேவையில் பங்கேற்பதால், இவர்களுடனான உத்தியோக பூர்வ கடமைகளை துரிதப்படுத்தவும், மக்களுக்கு விரைவாக கருமமாற்றவும், வீணான தாமதங்கள் மக்களுக்கு ஏற்படுவதை தவிர்க்கும் நோக்குடன், இச்சேவையை மக்களுக்கு வழங்குவதில் எமது அமைச்சு மகிழ்ச்சி அடைகிறது.

### மாணவர் காப்புறுதித் திட்டம்

யாழ் மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களை உட்படுத்திய 445 பாடசாலைகளைச் சேர்ந்த 158,458 மாணவர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படுகின்றது:

இத்திட்டத்தை அறிமுகப்படுத்தவென இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனத்துடன் வடக்கின்மீள் குடியேற்ற, புனரமைப்பு அதிகாரசபை ஒருமாணவனுக்கு ரூபா 25 000 /- பெறுமதியான விபத்துக்காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென எந்தவொரு மாணவனும், எதுவித பணக் கொடுப்பனவும் செலுத்தத்தேவையில்லை.

இத்திட்டத்தின் விசேடஅம்சங்களும், இதனால் மாணவர்களுக்குக் கிடைக்கும் பயன்பாடுகள் தொடர்பான விரிவான அறிவித்தல் விரைவில் வெளிவரும்.

இந் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளும்படி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்கள் மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட ஆசிரியர்கள், மாணவ வகுப்புத்தலைவர்கள் இத் திட்டத்தை உடன் அமுல்படுத்தும் முகமாக இதற்கென அனுப்பிவைக்கப்பட்டுள்ள படிவங்களை கோட்டமட்டத்தில் பெற்று அவற்றைப் பூர்த்தி செய்து நடமாடும் சேவைநாள்களில் தத்தம் பாடசாலை மாணவர்களுக்கான கூட்டுக்காப்புறுதிகளை பெற்றுக்கொள்ளலாம்;

### பனை அபிவிருத்தி சபை

#### தொழிலாளர் காப்புறுதித் திட்டம்

பனை சார் சீவல் தொழிலாளர்களுக்கான ரூபா 100, 000 /- பெறுமதியான விபத்துக் காப்புறுதித் திட்டத்திற்கு இதுவரை தங்கள் பெயர்களைப் பதிவு செய்த 2,000 க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கான கூட்டுக் காப்புறுதிப்பத்திரம் வழங்கப்படும்:

இதற்கென விண்ணப்பித்த தொழிலாளர்கள் அவர்கள் சார்ந்த சங்கங்கள் அவற்றின் பிரதிநிதிகள் இந்த நடமாடும் சேவை நடைபெறும் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில், பனை அபிவிருத்தி சபை அலுவலகப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

தொழிலாளர்களுக்கான தனித்தனிக் காப்புறுதிப் பத்திரம் தொடர்ந்து மத்திய கல்லூரியில் இயங்கவுள்ள இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் விசேட கருமபீடம் ஊடாக தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இது வரை விண்ணப்பிக்கத் தவறிய தொழிலாளர்கள் அவர்கள் சார்ந்த சங்கங்கள் ஊடாக இச்சேவையின் போது விண்ணப்பிக்கலாம்.

### மாணவர் புலமைப் பரிசில் திட்டம்

யாழ். மாவட்டத்தில் யுத்த அனர்த்தம் காரணமாக தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவிகளுக்கான புலமைப்பரிசில் உதவித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கெனத் தெரிவு செய்யப்பட்ட மாணவ, மாணவியர் தமக்கான புலமைப்பரிசில்களை இந்த நடமாடும் சேவையின் போது பெற்றுக்கொள்ளலாம்,

### ஏனைய துறைசார் சேவைகள்

★ அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களைப் பெறவும், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை கையளிப்பதற்குமான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

★ கடவுச் சீட்டுகளுக்கான விண்ணப்பங்களை பெறவும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கையளிப்பதற்குமான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

★ மோட்டார் வாகனபதிவு திணைக்களத்திலிருந்து மோட்டார் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குப் பரிசோதகர் வெகு விரைவில் வரவிருப்பதால், தாமதமின்றிப் பரிசோதனைகள் செய்து சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குரிய படிவங்களைக் கையளிக்கலாம்.

★ கல்வி, உயர்கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் உட்பட உயர் அதிகாரிகள் பங்குபற்ற இருப்பதால் மத்திய கல்வி அமைச்சின் ஊடான தமது பிரச்சினைகளை முன்வைக்கும்படி கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

★ குவைத் நாட்டிலிருந்து இலங்கை திரும்பியவர்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள்.

★ வடக்கு - கிழக்கு மாகாணசபையின் தலைமைச் செயலாளர் உட்பட மற்றும் அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் வர இருப்பதால் இவற்றுடன் சம்மந்தப்பட்ட பொதுமக்கள், அரச அலுவலர்கள தமது கோரிக்கைகளை முன்வைக்கலாம்.

★ யுத்த அனர்த்தங்களால் குடும்பத் தலைவர்களை இழந்தவர்கள், ஊனமுற்றவர்கள், உழைக்கும் திறனை இழந்தவர்களின் சுயதொழில் வாய்ப்புக்கான முன் உதவித் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்படும்.

★ மீனவர்கள் தொழில் புரியும்போது அவர்கள் எதிர்கொள்ளும் உயிராபத்துக் காரணமாக மீனவர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றை அமுல் படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் அங்கம் வகிக்கும் சங்கங்கள் தத்தம் பிரதிநிதிகள் ஊடாக மீனவர்கள் தொடர்பான விபரங்களை வடக்கின் மீள்குடியேற்ற மற்றும் புனரமைப்பு அதிகார சபையின் அலுவலகப் பகுதியில் கையளிக்கவும்.

★ விவசாயிகளுக்கான விசேட ஓய்வூதியத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதால், விவசாயத் தொழிலில் ஈடுபடுவோர் அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் நேரில் சமுகம் தரும வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்;

### தென்மராட்சி மக்களுக்கு...

பாரிய அழிவுகளைச் சந்தித்து முற்றாக சிதைவடைந்து போயுள்ள தென்மராட்சி பகுதியை மீள கட்டியெழுப்பும் பாரிய பணியினை ஆரம்பிக்க உள்ளதால் இப்பகுதி வாழ் மக்கள் இந் நடமாடும் சேவையின் போது வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபையினூடாக வழங்கப்படவுள்ள விசேட இழப்பு மதிப்பீட்டுப் படிவத்தைப் பெற்று உரிய ஆவணங்களுடன் சபைக்கு விண்ணப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உதவித் திட்டங்களை முன்னெடுக்க பூரண மதிப்பீட்டின் தேவை அவசியமாதலால் பாதிப்புக்குள்ளாகிய மக்கள் தமது பதிவுகளை விரைவாக பூர்த்தி செய்யும்வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**குறிப்பு:- கல்லூரி முன்றலில் சேவை செய்யும் தொண்டர்களின் வழிகாட்டலைப் பெற்று சம்பந்தப்பட்ட அலுவலகப் பகுதிகளுக்குச்சென்று தத்தமக்குரிய சேவைகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

செயலாளர்,
வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்
வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு.

(கி-2825)

நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த
தன்மையான் ஆளப்படும்.

குறள்

# வலம்புரி

## பயண சுகம்

யாழ் மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிமுறை ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பயண அனுமதிமுறையால் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்-கஷ்டங்கள்குறித்துஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்ததை அடுத்தே இப்பயண அனுமதி முறையை உடன் ரத்துச் செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்லமுடியாது பலர் திண்டாடுவதற்கு முக்கிய காரணமாக இருப்பது பாதுகாப்பு பிரிவினரிடம் இருந்து பெறவேண்டிய பயண அனுமதியாகும். இவ்வனுமதியைப் பெறுவதற்காக இராணுவ பிரிகேட்டுகளில் படிவம் பெறுவது முதல் கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலர் சிவில் நிர்வாகம் என அலைந்து திரிவது வரை பயணம்போதும் என்றாகிவிடும்.

எல்லாப்பத்திரங்களையும் பூர்த்தி செய்து ஒப்படைத்தாலும், பயண அனுமதி கிடைத்து விட்டதா என்பதைப் பார்ப்பதற்காக ஏற்படும் அலைச்சல் சொல்லும் வகையன்று. பயண அனுமதி பார்க்கச் சென்று இவ்வுலகத்தையே விட்டுப் பிரிந்தவர்கள் பலர். இப்போது பயண அனுமதிமுறை நீக்கப்படுவதால் பயணத்தில் ஒரு வகையான ''அலைச்சல் விடுதலை'' கிடைத்துள்ளது.

அதேவேளை பயணம் செய்வோரின் எண்ணிக்கையை ஓர் வரையறைக்குள் வைத்திருந்த பயண அனுமதிநீக்கப்படும்போது பயணச்சீட்டுக்களைப் பெறும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் இதனால் பயணச்சீட்டுக்களைப் பெறுவதில்பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய ஓர்நிலைதோன்றும். இத்தகைய சூழ்நிலையில் பயணச் சீட்டுக்களுக்குப் பேரம் பேசும் அரச மரத்தடித் தரகர்களுக்கு பெரும் கொண்டாட்டமே. இதனால் செல்வாக்குள்ள - பணவசதி படைத்தவர்களே பயணச்சீட்டைப் பெறும் வாய்ப்பு காணப்படும்.

எனவே பயண அனுமதி முறை நீக்கப்படுவதால் ஏற்படும் ''பயண சுகத்தை'' மக்கள் முழுமையாக அனுபவிக்க விமான-கப்பல் பயண சேவையிலும் அதிகரிப்பை ஏற்படுத்துவது மிகமிக அவசியமாகும்.

# தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழர்களின் பண்டைய மதங்கள் பற்றிய ஆய்வு

## (7)

(சென்றவாரத் தொடர்ச்சி)

சிவ வழிபாடு இடைக்காலத்திலும் ஈழத்தமிழரிடையே தொடர்ந்து நிலைத்திருந்ததற்கு அவர்கள் வெளியிட்ட நாணயங்களே சிறந்த சான்றாக விளங்குகின்றன. ஈழத்தமிழர் வரலாறு பற்றி ஆராய்ந்த பலரும் அவர்களுக்குரிய அரசும், நாணயங்களும் கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில தோன்றியதாகக் கூறிவந்துள்ளனர். ஆனால் எமது அண்மைக்கால ஆய்வுகள் பண்டு தொட்டு சுதேச அரச மரபும், நாணயங்களை வெளியிடும் மரபும் இருந்து வந்துள்ளதை எடுத்துக் காட்டுவதுடன், ஒரு மன்னன் ஆளுகைக்குட்பட்ட தமிழ் அரசு வட இலங்கையில் கி.பி7 ஆம் நூற்றாண்டில் தோன்றியதையும் உறுதிப்படுத்துகின்றன. பேராசிரியர் இரகுபதி நாம் எடுத்துக்காட்டியதொல்லியல் சான்றுகளுடன் இலக்கியச் சான்றுகளையும் ஒப்பிட்டு இதன் தோற்ற காலத்தை மேலும் ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்டதாகக் கொள்ளலாம்எனக்கருதுகிறார். (உரையாடலின்போது கூறிய கருத்து.)

அம்சம் என உறுதியுடன் கூறலாம். நாணயங்களில்வரும் சிவ சின்னங்களையும் நாயன்மார் பாடல்களில் சிறப்பித்துப் பாடப்பட்ட திருக்கேதீஸ்வரம், திருக்கோணஸ்வரம் போன்ற சிவத்தலங்களையும் ஒப்பிடும் போதுஇக்காலத்தில் ஈழத்தமிழரிடையே சிவ வழிபாடு பெற்ற முக்கியத்துவம் மேலும் தெளிவாகிறது.

### நல்லூர் இராசதானி

நல்லூர் இராசதானிதோற்றம் பெற முன்னர் வடஇலங்கையிலசாவகன் தலைமையில் தமிழரசு ஒன்று இருந்ததையும், அவ்வரசு சிங்கள அரசுக்கு எதிராகப் போரிட்டதையும் சிங்கள மன்னர்கள் அவ்வரசைத் தோற்கடிக்கப் பாண்டியரின் படை உதவியை நாடியதையும் சமகாலப் பாளிஇலக்கியங்கள், பாண்டியக் கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. எமக்கு கிடைத்த சில நாணயங்களின் முன்புறத்தில் நந்தியும் பின்புறத்தில் தேவநாகரி எழுததில் ஸ்ரீசாவக என்ற பெயரும் காணப்படுகிறது இதில் ஸ்ரீசாவக என நாம் வாசித்ததைப் பேராசிரியர் பத்மநாதன் ஸ்ரீசாவகன் எனவாசிக்கலாம்எனக்கருத்து தெரிவித்துள்ளார். இவற்றிலிருந்து நல்லூருக்குமுன்னோடி

## கலாநிதி ப. புஷ்பரட்ணம்

இக்காலத்திலிருந்து சிவவழிபாடு மேலும் முக்கியம் பெறறதை பெருமளவுக்கு வடஇலங்கையில் கிடைத்த இவ்வரசு கால நாணயங்களே உறுதிப்படுத்துகின்றன இந்நாணயங்களில் முன்புறத்தில் பீடத்தின் மேல் இடம் அல்லது வலப்புறம் பார்த்த நிலையில் அமர்ந்த காளையின் உருவமும், அதன் இருபுறமும் குத்துவிளக்கும் காளைக்கு மேலே சில நாணயங்களில சூரியனும் நாணயத்தின் பின்புறத்தில பீடத்தின் மேல் இரண்டு அல்லது மூன்று மீன் சின்னமும் அவற்றிற்கு இருபுறமும் குத்துவிளக்கும் காணப்படுகின்றன. இதில் முக்கிய சின்னமாக இடம் பெறும் காளையின் தோற்ற அமைப்பு, கலைமரபு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு 30 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வேறுபாடு கால மாற்றத்தை அல்லது பல்வேறு மன்னர்களால் வெளியிட்டதைகுறிக்கலாம். இதில்முக்கியசின்னங்களாக இடம் பெற்றுள்ள பீடமும், பீடத்தின் மேலமைந்த காளையின் தோற்ற அமைப்பும், மீன் சின்னங்களின் வடிவமைப்பும் இந்திய நாணயங்கள் எதிலும் காணப்படவில்லை. இவை ஈழத்தமிழருக்குரிய தனித்துவமானவை

யாக அரசு ஒன்று இருந்தமையும் அவ்வரசில் சிவ வழிபாடு முக்கியத்துவம் பெற்றமையும் தெளிவாகிறது.

நல்லூர் அராசதானி கால நாணயங்களில் ஏனைய சின்னங்களை விடக் காளைமுக்கியத்துவம் பெற்றது இதில் பீடத்தின் மேல்இடம் அல்லது வலப்புறம் பார்த்த நிலையில் காளை அமர்ந்திருக்க இதன் இருபுறமும் குத்துவிளக்கும், மேலே சூரியனும், பிறைச் சந்திரனும் காணப்படுகின்றன. ஆரம்பகாலங்களிலதனித்தனி தெய்வங்களாக வழிபடப்பட்ட சூரியனும், சந்திரனும் இங்கு சிவ வழிபாட்டுடன் இணைந்து கொண்டதைக் காணமுடிகிறது; நல்லூர் இராசதானிக்கு முற்பட்ட கால நாணயங்களில் வரும் காளைக்கு கீழே அமைந்த பீடத்திற்குப்பதிலாக நல்லூர் இராசதானி கால நாணயங்களில் பலவற்றில் சேது என்ற மொழி பொறிக்கப்பட்டது. இதில சேது வாசகத்திற்கும் பீடமாகக் காட்டப்பட்டுள்ள மூன்று கோடுகளுக்கு மிடையிலான தொடர்பு ஆராய்ந்து பார்க்கக் கூடியது சில நாணயங்களில் காளைக்குப்பதிலாக மன்னன் உருவமும் அதற்கு இடப்புறமாகச் சிறிய காளையும், அருகில் சிவனுக்குரிய

திரிசூலமும் காணப்படுகின்றன. இக்கால மன்னர்கள் சிவ வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர் என்பதற்கு. காளையை நாணயங்களில் மட்டுமன்றி அரச கொடிகளிலும், ஆவணங்களிலும் அரச இலட்சனையாகப் பயன்படுத்தியமை சான்றாகும். அத்துடன் இக்கால மன்னர்களுள் ஒருவனை தக்ஷிண கைலாச புராணம் 'இடபவான்கொடி எழுதிய பெருமான்' எனவகுணிக்கின்றது இதைச்சோதிட நூலும் உறுதிப்படுத்துகிறது. அண்மையில் உடுத்துறையில் பல அடி ஆழத்தில் புதையுண்டிருந்த நநதி விக்கிரகம்ஒன்று கிடைத்துள்ளது. $2\frac{1}{2}$ அங்குல நீளமும் $2\frac{1}{2}$ அங்குல அகலமும் கொண்ட இச்சிறியவிக்கிரகம் ஒரு வகை மாபிள கல்லில் மிக அலங்காரத் தோற்றத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் தோற்ற அமைப்பு நல்லூர் இராசதானிகால நாணயங்களில் வரும் நந்தியை ஒத்திருப்பதால் இவ் விக்கிரகத்தை அக்காலததில் மக்கள் தம் வீடுகளில் வைத்து வழிபடப் பயன்படுத்தியதாகக் கருத இடமுண்டு.

இவ்வரசு காலத்தில் சிவ வழிபாட்டுக்குரிய ஆலயங்கள் இருந்தது பற்றி இவ்வரசு தொடர்பாகப் பிற்காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. இதை இவ்வரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட சில இடங்களில் கிடைத்த சிலைகள், சிற்பங்களும் உறுதிப்படுத்துகின்றன. அவற்றுள் நல்லூர் பூதவராயர் குளததிலிருந்து கண்டெடுக்கப்பட்ட தக்ஷிணாமூர்த்தி, யாழ்ப்பாணம் கமால் வீட்டுப்பகுதியில் புதையுண்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கபபட்ட சண்டேஸ்வரர் சிற்பங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவற்றின் கலைமரபு, அவை வெளிப்படுத்தும் கருத்து, காலம் என்பதையிட்டு வரலாற்றாசிரியர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. ஆயினும் பேராசிரியர் சிவசாமி இவை நல்லூர் இராசதானி காலத்து ஆலயங்களில வைத்து வழிபடப்பட்டதாகக் கூறியுள்ளமை பொருத்தப்பாடாக உள்ளது.

### முருகவழிபாடு

சிவ வழிபாட்டை போல் முருக வழிபாடும் ஈழத்தமிழரிடையே பண்டுதொட்டு முக்கியத்துவம் பெற்றிருக்கலாம் என்பதை அண்மைக்காலத் தொல்லியல்ச் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. முருக வழிபாட்டை தமிழருக்குரிய தனித்துவமான வழிபாடுகளில் ஒன்றாகக் கொள்ளும் மரபு நீண்ட காலமாக இருந்துவருகிறது. சங்க இலக்கியத்தில் வரும் ''முருகு'' (அகநானூறு :22-11, புறநானூறு 56: 11, நற்றிணை 47:10) ''செவ்வேள்'' (மது

ரைக் காஞ்சி 611, நற்றிணை 34, குறுந்தொகை 53:3), ''மஞ்சையன்'' (திருமுருகாற்றுப்படை 210), ''விரை மயில்மேல் ஞாயிறு'' (பரிபாடல் 18: 26) என்ற சொற்றொடர்கள் முருக வழிபாட்டுடன் தொடர்புடையன. இம் முருகன் வழிபாடு வட இந்திய வழிபாட்டுடன் இணைந்து காலப் போக்கில் ''குமரக'' கடவுள் என்ற பெயரையும் பெற்றது.

முருக வழிபாட்டின் தொடக்க காலச் சான்றுகளாக தமிழகத்தில் ஆதிச்சநல்லூர் பெருங்கற்கால பண்பாட்டில் பெறப்பட்ட சான்றுகள் போல் இலங்கையிலும் பொம்பரிப்பு, அநுராதபுரம், பின்வேவ, கந்தரோடை, பூநகரி ஆகியஇடங்களில் பெறப்பட்ட வேல், சேவல் சின்னங்கள் விளங்குகின்றன. கி.பி 5 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பாளி இலக்கியங்களிலும், பிராமிக் கல்வெட்டுக்களிலும் அக்காலச் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பல தரப்பட்ட மக்களுடைய பெயர்கள் காணபபடுகின்றன. அப் பெயர்களில் பல அவர்களது சமய நம்பிக்கைகளையும் பிரதிபலிப்பதாக விளங்குகின்றன. பேராசிரியர் பரணவிதான இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் ஆட் பெயர்களை மத அடிப்படையில வேறுபடுத்தி அவற்றை பௌத்த இந்துக் கடவுளரோடு தொடர்புபடுத்திப்பார்க்கிறார். அப்பெயர்களில் சில முருக வழிபாட்டுடன் உள்ள தொடர்பைக் காட்டுவதாக உள்ளன. அவற்றுள் வேல என்ற பெயர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இது சங்க இலக்கியத்தில் வரும் வேலன் வழிபாட்டை நினைவுபடுத்துவதாக உள்ளது. தமிழகத்தில் எப்படி வடஇந்திய வழிபாட்டுக்கலப்பால் முருகன் குமரன் என்ற பெயரால் வழிபடப்பட்டதோ அதே போல பௌத்த மதத்தின் வருகையுடன் தொடர்பு ஏற்பட்ட இலங்கை, வட இந்தியத் தொடர்பால முருகவழிபாட்டிலும் சில மாறுதல்கள் ஏற்பட்டதை குமர, மகாசேனன், விசாக போன்ற பெயர்கள் எடுத்து காட்டுகின்றன. இதில் ''விசாக'' என்ற பெயர் வட இலங்கையில பெரியபுளியங்குளம் என்ற இடத்தில உள்ள கி.மு.2 ஆம் நூற்றாண்டுக்குரிய இரு கல்வெட்டுக்களில தமிழ் வணிகர்களுக்குரிய ஒரு பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ளது, இதையொத்த பெயர் தமிழகத்தில் கொடுமணல் அகழ்வாய்வின் போது பெருங்கற்கால மட்பாண்டத்தில பெறப்பட்டுள்ளது. பேராசிரியர் பரணவிதான இப்பெயருக்குரியவர்களை முருக (ஸ்கந்த) வழிபாட்டுடன் தொடர்புடையவர்களாகக் கருதுகிறார். இப் பின்னணியில் நாணயங்களில் வரும முருக வழிபாட்டுடன் தொடர்புடைய சான்றுகளை நோக்கலாம்.

(தொடரும்)

## தினசரி தியானம்

### நேர்மை

இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சியவர்;

திருக்குறள்

நேர்மை தவறி விடின் திருவருளுக்கு அன்னியனாய்ப் புல்லியனாய் விடுவேன். அந்தோ!

நேர்மையல் ஒழுகுகிறவன் மறைத்து வைப்பதற்கு ஒன்று மில்லை. திருட்டுத் தனமாய் அவன் எதையும் செய்வதில்லை. பொருந்தாத ஆசைக்கு அவன் அடிமைப்படுவதில்லையாதலால் அவன் யாருக்கும் அஞ்சுவதில்லை; ஏறுபோல் அவன் நடக்கிறான். நிமிர்ந்திருக்கிறான். தெளிவுறப் பேசுகிறான் நேரே முகத்தைப் பார்க்கிறான். அவனே நேர்மைக்கு விளக்கமாகிறான்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

## எரிபொருட் தட்டுப்பாடு தீர்ந்தபாடில்லை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு எரிபொருள் விற்பனை நிலையங்களுக்குச் செல்லும் பொதுமக்கள் அங்கு எரிபொருள் தீர்நது விட்டது என்ற அறிவிப்பைக் கேட்டு ஏமாற்றததுடன் வெறுங்கையோடு திருமபுவதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை, நகரப்பகுதி எரிபொருள் விற்பனை நிலையம் ஒனறில் 'எரிபொருள் தீர்ந்து விட்டது, என்ற வாசகம் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ள மையையும் அண்மையில் காணக்கூடியதாய் இருந்தது.

எரிபொருட்களுக்கு குடாநாட்டில் எந்தவிதமான தட்டுப்பாடும் கிடையாது எனசம்பந்தப் பட்டவர்கள அடிக்கடி அறிவித்துவருவதும் அங்கு குறிபபிடத்தக்கது.

எனினும் தனியார் எரிபொருள் விற்பனைக் கடைகளில் தேவையான அளவு எரிபொருள் கூடுதலான விலைக்கு விற்கப்பட்டு வருகின்றது (உ-10)

# ஐ.தே.கட்சி ஆட்சி அமைத்ததும் மோதத்திற்குள் பிரச்சினைக்கு தீர்வு

## வன்னிவேட்பாளர் புஞ்சிகேவா தெரிவிப்பு

(வவுனியா)

ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர் ரணில்விக்கிரமசிங்காவின் தலைமையில் புதிய அரசு அமைக்கப்பட்டதும் ஆறுமாதகாலத்துக்குள் தமிழ் மக்களுடைய பிரச்சினை தீர்க்கப்பட்டு நாட்டில்சமாதானம் ஏற்படுமென அக்கட்சியின் வன்னிமாவட்ட வேட்பாளர் சாந்த குமாரபுஞ்சிகேவா கூறியுள்ளார்.

நேற்று வவுனியாவாடி வீட்டில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

அங்குஅவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

நாட்டில் சமாதானம் ஏற்பட பல நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்; ஐக்கியதேசியக்கட்சி ஆட்சி அமைத்ததும் இனப்பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனைத்தீர்த்து வைப்போம் என்றுகூறினார்.

(வ)

## கூட்டணித் தலைவர்கள் விரைவில்வவுனியா செல்வர்

(வவுனியா)

நான்கு தமிழ்க் கட்சிகளின் சார்பில் உதய சூரியன் சின்னத்தில் வன்னிமாவட்டத் தேர்தல் களத்தில்குதித்துள்ள வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்ய தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் அடுத்த வாரம் வன்னி செல்லவுள்ளனர்;

தமிழர் விடுதலைக்கூட்டணியின் சிரேஷ்ட்ட உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி மாவை சேனாதிராசா, எஸ். சிவமகாராசா ஆகியோரே வன்னி செல்லவுள்ள கூட்டணிப் பிரமுகர்களாவர்.

வன்னி செல்லவுள்ள இவர்கள் இருதினங்கள் அங்கு தங்கியிருந்து தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்வார்கள் என கூட்டணிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(வ)

## சிப்பாய் இருவருக்கிடையே துப்பாக்கிச்சூடு - ஒருவர் பலி

### சாவகச்சேரியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இராணுவச் சிப்பாய்கள் இருவருககிடையில் எழுந்த மனக்கசப்புக் காரணமாக அவர்கள் இருவரும் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதால் ஒரு சிப்பாய் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஜயந்தருபசிறி மற்றும் பீ. ஏ. பி. ஜீவந்தயேஜோன் ஆகிய இரண்டு சிப்பாய்களுக்கிடையில்கருத்து முரண்பாடு ஏற்பட்டு மனக்கசப்புத் தோன்றியது. இதனால் கோபமடைந்த இருவரும் மாறிமாறி சுடுபட்டதில் பீ. ஏ. பி. ஜீவந்தயேஜோன் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணை நேற்று சாவகச்சேரி பதில் நீதவான் அ. பிறேம்சங்கர் முன்னிலையில் நடைபெற்றது. ஜயந்தருபசிறி என்ற சிப்பாய் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்; அவரை எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (இ-10)

## நாகர்கோவிலில் சிப்பாய் காயம்

(யாழ்ப்பாணம்)

நாகர்கோவிலில் நிலைகொண்டுள்ள படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மோட்டார்த் தாக்குதலில் ஒரு இராணுவச்சிப்பாய் காயமடைந்துள்ளதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

(ந-4)

செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் ஸ்தாபனத்தாரும் யாழ். சேவையும் இணைந்து வழங்கும்

தீபாவளி வாழ்த்துச் செய்திகள்

யாழ். சேவை ஊடாக உங்கள்உறவுகளுக்கு தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறீர்களா?

அப்படியாயின் வாழ்த்தப்படுவோர் பெயர்களை எழுதி கீழே உள்ள கூப்பனைப் பூரணப் படுத்தி அனுப்பி வைக்கவும்.

======→==================--=

தீபாவளி வாழ்த்துச் செய்தி

வாழ்த்துவோர் பெயர்: ..............................

சொந்த முகவரி: ..............................

..............................

தற்காலிக முகவரி: ..............................

அடையாள அ. இல: ..............................

=========================

வாழ்த்துக்கள் வந்து சேரவேண்டிய முகவரி

உருவாக்கல் இயக்குநர்,

செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்

சுண்டுக்குளி முன் ஒழுங்கை,

சுண்டுக்குளி.

வாழ்த்துக்கள் வந்து சேர வேண்டிய இறுதித் திகதி: 10-11-2001

இயக்குநர்

செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்,

[சி2740]

# தமிழ்-முஸ்லிம்களின் உறவு குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசுவோம்

## ஸ்ரீ. மு. காங்கிரஸ் வேட்பாளர் தகவல்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் எதிரிகள் அல்லர் என்று மட்டக்களப்பு முஸ்லிம் காங்கிரசின் வேட்பாளர் சட்டத்தரணி ஒமர் லெப்பை அப்துல் மஸ்து தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் மட்டக்களப்பு காத்தான் குடியில் இடம்பெற்றது இக் கூட்டத்தில் பேசுகையிலேயே அப்துல் மஸ்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்;

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் முடிவடைந்தவுடன் தமிழ் முஸ்லிம் உறவுகள் குறித்தும் இனப்பிரச்சினை தொடர்பாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் விடுதலைப் புலிகளும் பேச்சில் ஈடுபடுவதற்குரிய காலமொன்று நிச்சயமாக ஏற்படுமென்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்;

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்பு விடுதலைப் புலிகளுடன் தீர்வை எட்டக் கூடிய வகையில் பேசுமானால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதற்கு பூரண ஆதரவை வழங்குமென்று கட்சியின் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பொது ஜன ஐக்கிய முன்னணியுடனோ அல்லது ஐ.தே கட்சியுடனோ விடுதலைப் புலிகளுக்கு எதுவித உடன்படிக்கையும் கிடையாதென்றும் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

### எஸ். பிக்கு

இவ்வார்ப்பாட்டம் விகாரமாதேவிப்பூங்காவில் மத வைபவங்களுடன் ஆரம்பமானது.

ஜனாதிபதி சந்திரிக்காவை முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா அவமதிக்கும் வகையில் பேசிவருவது ஜனாதிபதியை மட்டுமல்லாதுநாட்டில்உள்ள சகல பெண்களையும் அவமதிக்கும் வகையில் அமைந்திருப்பதாக மகளிர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று நண்பகல் நடைபெற்ற இவ்வார்ப்பாட்டத்தில் பெருந்திரளான பெண்கள் கலந்து கொண்டனர்.

(வ)

### மட்டக்களப்பில்

யங்கள் மூடப்பட்டும், சந்தைகள் இயங்காமலும் காணப்பட்டதுடன் பாடசாலைகள் ஆசிரியர்கள், மாணவர்கள் வரவின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

போக்குவரத்துச் சேவை இடம்பெறாததால் வீதிகள் நகரங்கள் மக்கள் நடமாட்டமின்றிக் காணப்பட்டது.

இதேவேளை ஹர்த்தால் கடையடைப்பினால அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் நேற்று தமது பிரசார நடவடிக்கைகளை ரத்துச் செய்துள்ளதுடன் ஹர்த்தாலுக்கு ஆதரவளித்ததாகவும் மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ)

### புலிகளுடன்

மாயின் அதனைத் தமதுகட்சி வரவேற்கும்.

புதியஇடதுசாரி முன்னணி புலிகளுடன் முன்னர் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது, அதனால் சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகள் இனவாத அடிப்படையிலேயே பிரசாரத்தைமேற்கொள்கின்றன இதனைஅனைத்துத் தரப்பினரும் தடுக்கமுன்வர வேண்டும என்றும் கேட்டுக் கொண்டார்.

இச்சந்திப்பில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் கொழும்புநகரசபைத் தலைவருமான தி.திருநாவுக்கரசு உடபடப் பலஉறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(ந-4)

### மோசடிகளை ..

யாழ்மாவட்டத்தில் வாக்குச்சீட்டுக்களை வாக்காளர்களுக்கு வழங்கும் போது உரியவர்களை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அடையாள அட்டையைப் பார்வையிட்டு வாக்குச்சீட்டுக்களை வழங்கினால் மோசடிகளை கட்டுப்படுத்தலாம் என்று தமிழ்க்கட்சித் தலைவர்கள் தேர்தல் ஆணையாளருக்கு ஆலோசனை தெரிவித்தனர். அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் யாழ்ப்பாணத்திற்கென தனியான ஒரு ஏற்பாடைச் செய்வதாக தேர்தல் ஆணையர் உறுதி அளித்துள்ளார்;

### கொத்தணி வாக்குச் சாவடிகள்

வலி வடக்கு வலி தெற்கு தென்மராட்சிப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்து வலிகாமம் வடமராட்சி பகுதிகளில்தங்கி இருப்பதனால் இவர்களுக்கு கொத்தணி முறையில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்ட போது. இது தொடர்பாக யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி உத்தியோகத்தருடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் சுலபமாக வாக்களிப்பதற்கு அரசபோக்குவரத்து வாகனங்களை கூடுதலாகப் பாவிக்க வேண்டும் என்றும் வேட்பாளர்கள் தனிப்பட்ட வாகனங்களில் வாக்காளர்களை ஏற்றி இறக்குவதைத் தடை செய்ய வேண்டும் என்றும் தீவுப்பகுதிகளில் தேர்தல் ஏஜெண்ட்டுகள் நியமிப்பதற்கும் நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்றும் தமிழ்க்கட்சித் தலைவர்கள் கேட்டுக் கொண்டபோது இதுதொடர்பாக பொலிசாருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என்றும் எனவே இது குறித்து அவர்களிடம் முறைப்பாடு செய்யலாம் என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளருடனான இச்சந்திப்பில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் செயலாளர் கலாநிதி என். குமரகுருபரன் யாழ்மாவட்ட வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரெலோ அமைப்பைச் சேர்ந்த செல்லையா பதமநாதன் ஈபிஆர் எல் எவ் வைச் சேர்ந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(வ)

## தேர்தல் வன்முறை 449 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு நேற்று வரையிலான 17 நாட்களில் நாடு முழுவதும் 449 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் தேர்தல் பணிமனை அறிவித்துள்ளது; (வ)

## மாளக சில்வா பொலிஸில் சரண்

(கொழும்பு)

ஸ்ரீ: எவ்: எம்; சிங்கள வானொலி நிலையத்துக்குள் அத்துமீறி நுழைய முற்பட்டதுடன், அதன் பாதுகாப்பு ஊழியர்களையும் மோசமாகத்தாக்கிய முன்னாள் எம்.பி மேவின் சில்வாவின் மகன் மாளக சில்வா நேற்று முன்தினம் கொள்ளுப்பிட்டி பொலிசாரிடம் சரணடைந்துள்ளார்.

மாளக சில்வாவும் அவரது குழுவினரும் அண்மையில் மேற்குறித்த வானொலிநிலை நிலையத்துக்குள் அத்துமீறி நுழைய முற்பட்டதுடன் அங்கு கடமையிலிருந்த பாதுகாப்பு ஊழியர்களையும் தாக்கினார்களென முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

### ஓமந்தையில்

தகவல் நிலையம் இத் தாக்குதலை ஊர்ஜிதம் செய்ததோடு தேசிய பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த உபாலி பிரதீப்குமார், பிறேமதிலகா ஆகிய இருவருமே கொல்லப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க மன்னார் மடுப் பகுதியில் விசேட அதிரடிப்படை முகாமின் முன்னரங்க காவல்நிலையங்கள் மீது விடுதலைப்புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டதாக இராணுவப்பேச்சாளர் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார். (வ-4)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு நவம்பர் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;